(எ) திண்டுக்கல் அரசினர் மருத்துவமனையில் மருத்துவர்கள் செவிலியர்களது காலவரையின்றி வேலை நிறுத்தம் குறித்து.

திரு. க. சுப்பு : பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒத்திவைப்புத் தீர்மானம் எப்பொழுது வரும் என்று காத்துக் கொண்டிருக்கிறேன். நான் நோட்டிஸும் கொடுத்திருக்கிறேன்............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாயின்ட் ஆப் ஆர்டர் தான் இந்த நேரத்தில் எடுத்துக் கொண்டிருக்கிறேன்......

திரு. க. சுப்பு : என்னுடையதும் அதுதான். தலைவர் அவர்களே, கேள்வி நேரம் முடிந்து அதன் பிறகு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்று இருக்கிறது. அதற்கு முன்னாடியே வந்துவிட்டது. எனக்கும் பேச அவகாசம் தேவை...........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் இன்று கடைசி நாள் என்பதாலேயே அவரவர்கள் பிரச்னையை எடுத்துச் சொல்வதற்கு வாய்ப்பளிப்பதன் மூலம் அமைச்சர்களும் அதைத் தெரிந்து கொள்ள முடியும் என்று நினைத்து எல்லோருக்கும் வாய்ப்பளிக்க நினைக்கிறேன். ஆனால், அதையே விவாதிப்பதற்கு எடுத்துக்கொள்கிறார்கள் என்றால் அது சரியல்ல. அதேபோல திரு. சுப்பு அவர்கள் தமது ஒழுங்குப் பிரச்னையில் என்ன முக்கியமானது என்பதைத் தெரிவிக்கட்டும்.

திரு. க. சுப்பு : இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தை முதலில் எடுத்துக்கொண்டு மற்றதை நீங்கள் அனுமதித்தால் எனக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை.

மதுரை மாவட்ட தலைமை மருத்துவ மனை திண்டுக்கல்லில் இருக்கிறது. அங்குள்ள டாக்டர்களும் நர்ஸுகளும், மற்ற நான்-மெடிகல் உத்தியோகஸ்தர்களும் இன்டெபனட் ஸ்டிரைக் ஆரம்பித்து இருக்கிறார்கள். ஏற்கனவே அவர்கள் சிட்டிங் ஸ்டிரைக் செய்துக் கொண்டிருக்கிரார்கள்.

அங்கே இருக்கிற டி. எம். ஓ. திரு. எஸ்.எம். அப்துல்கான் என்பவர் மீது வேண்டுமென்றே சிலர் சதி செய்து கைது செய்யப்பட்டிருக்கிறார். அவர்கள் சொல்லியிருக்கிற கோரிக்கை அதே ஆஸ்பத்திரியில் மகாதேவன் என்ற டாக்டரை சிலபேர் சதி செய்து கைது செய்யச் செய்திருக்கிறார்கள். அங்கே இருப்பவர்களும் அவருக்கு ஆதரவாக இருக்கிறார்கள். அங்கே இருக்கக்கூடிய பிரான்

என்ற விஜிலென்ஸ் ஆபீசரும், முஸ்தப்பா, சுப்பராஜ் என்ற டாக்டர்களும் ஒன்று சேர்ந்து புகார் கொடுத்தன் பேரில் அவர் கைது செய்யப்பட்டிருக்கிறார். அந்த டி.எம். ஓ. பொறுப்பானவர், சிறப்பானவர் என்று பொது மக்களிடத்திலே பெயர் வாங்கியவர். அவர் டி. ஒ. லெட்டர் போட்டு இரண்டு பேரை மாற்றி விட்டார் என்பதற்காக, ஒருவர் ஈ. எஸ். ஐ. ஆஸ்பத்திரியில் பணியாற்றப் போய் விட்டார். அங்கே போன பிறகும் இங்கே பிரைவேட் பிராக்டீஸ் செய்கிறார் என்று தகவல். டி.ஓ. லெட்டர் போட்டு மாற்றினார் என்ற காரணத்திற்காக, அங்குள்ள பொறுப்பற்ற அதிகாரிகள் வேண்டுமென்றே அவரைக் கைது செய்திருக்கிறார்கள். இதை மேல் அதிகாரிகளே விசாரணை செய்திருக்கலாம் விஜிலென்ஸ் ஆபிசர் தேவையில்லை. அந்த விஜிலென்ஸ் ஆபிசர்—திரு. பிராங்க் என்பவர் அவரே விசாரணையில் விஜிலென்ஸில் வைக்க வேண்டியவர். அவர் ஒன்றும் இதற்கெல்லாம் அப்பாற்பட்டவர் அல்லர். இதை நீங்களாகவே விசாரணை செய்திருந்தால், அந்த விஜிலென்ஸ் ஆபீசரே இதற்கு நடந்ததை தெரிந்து கொண்டிருந்தால், எப்படி விஜிலென்ஸ் அதிகாரிகள் நடக்கிறார்கள் என்பதைப் புரிந்துக் கொண்டிருந்தால் இப்படிப்பட்ட நிலைமை இந்த இன்டெபனட் ஸ்டிரைக் ஏற்பட்டிருக்காது. ஆகவே இது ஒரு அவசரமான பிரச்னை என்பதைப் புரிந்து கொண்டு இன்டெபனட் ஸ்டிரைக் தொடர்ந்து நடந்தால் மக்கள் தாங்க மாட்டார்கள் நோயாளிகள் அதிகமாக வரும் ஆஸ்பத்திரி அது, அதனால் இதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[முற்பகல் 10–30]

திரு. மு. அம்பிகாபதி : பேரவைத் தலைவரவர்களே, இதையெல்லாம் நாங்கள் கேட்டு விடுவதோடு முடித்து விடப் போகிறீர்களா, அல்லது இதற்கு மேலே ரிப்ளை உண்டா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கத் தயாராக இருந்தால் நானே அதை அவை முன்பு வைத்து இருப்பேன் என்று சொன்ன பிறகும், நீங்கள் எழுந்து சொல்கிறபோது, நான் எண்ணியது என்னவென்றால், நீங்கள் அதைச் சொல்லிவிட்ட காரணத்தால் அரசின் கவனத்திற்கு அது கொண்டு வரப்பட்டு விட்டது, அவர்கள் அதன் மீது நடவடிக்கை எடுப்பார்கள், அந்த வகையில் என்னுடைய பளுவும் குறைந்தது என்று நினைத்தேன். ஆனால் நீங்கள் ஒழுங்குப் பிரச்சினை என்று எழுப்பி, அதன் மீது எல்லாவற்றையும் சொல்லிவிட்டீர்கள். அமைச்சர் பதில் அளிக்கத் தயாராக இருக்கிறாரா என்று கேட்டுத்தான் நான்

அதை அனுமதிக்க முடியும். நீங்கள் என் பொறுப்பில் விட்டு இருந்தால், அமைச்சரை வலியுறுத்திப் பதில் பெற்று இங்கே வைத்து இருப்பேன். ஆகவே, தாங்கள் ஒழுங்குப் பிரச்னை என்று எழுப்பி அவர்களின் கவனத்திற்கு அந்தப் பிரச்னையைக் கொண்டுவருவதோடு நிறுத்தி அமரலாம்.

திரு. என். சங்கரய்யா : திருச்சி சிம்கோ மீட்டர் சம்பந்தமாக........

திரு. மு. அம்பிகாபதி : நான் இன்னும் சொல்லி முடிக்கவில்லையே......

திரு. க. சுப்பு : அமைச்சர் இறுதியாகப் பதில் சொல்லப் போகிறாரா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள்தானே சொன்னீர்கள், அமைச்சர் பதில் சொல்லாவிட்டாலும் பரவாயில்லை, நான் விஷயத்தைச் சொல்லிவிடுகிறேன் என்று.

திரு. க. சுப்பு : அது வேறு பிரச்னை, அமைச்சர் தயாராக இருந்தால் பதில் சொல்லட்டும். அவரை அது குறித்துக் கேட்காமலேயே வேறு பிரச்னைக்குப் போகிறீர்களே?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் பதில் கூட சொல்லாவிட்டால் பரவாயில்லை என்று ஒழுங்குப் பிரச்னை என்று கிளப்பி, எல்லாவற்றையும் சொல்லி விட்டீர்கள். இந்த ஒழுங்குப் பிரச்னை எல்லாம் முடிந்த பிறகு, அமைச்சர் அவர்களை நான் கேட்கிறேன்.

(ஊ) கல்லூரி ஆசிரியர்கள் வேலை நிறுத்தம் குறித்து

திரு. மு. அம்பிகாபதி : தலைவவரர்களே, நான் மன்னார்குடி அரசுக் கல்லூரியில் பணிபுரியும் ஆசிரியர்கள் கைது செய்யப்பட்டு சப்ஜெயிலில் வைத்துள்ளது குறித்து கொடுத்து இருந்தேன். அதை விட சீரியஸ் விஷயம் வேறு என்ன இருக்கிறது இந்த சபையில் விவாதிக்க. ஆகவே, அதை அனுமதிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னிடத்தில் பதில் வரவில்லை. வந்தபின் அவையில் வைக்கப்படும்.